TNRM010070732023

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண்.07/2024
**CNR No: TNRM01-007073-2024**
****

1) ஹர்ணி, வயது 19, க/பெ.லேட்.பாலசுப்பிரமணியன், க.எண்.4/740, தொளுவலூர் அஞ்சல் பாப்பாகுடி, இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

**..... மனுதார்**

**/எதிர்/**

1) தியாகராஜன், வயது 64, த/பெ.ராக்கு, க.எண்.1/176 D, 5 வது தெரு, சூரன்கோட்டை சங்கு முத்துமாரி நகர், சூரன்கோட்டை அஞ்சல், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) சாந்தி, வயது 55, க/பெ.தியாகராஜன், க.எண்.1/176 D, 5 வது தெரு, சூரன்கோட்டை சங்கு முத்துமாரி நகர், சூரன்கோட்டை அஞ்சல், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

3) பாபு, வயது 32, த/பெ. சந்திரசேகரன், க.எண்.4/6, முகமை கிராமம், பொட்டகவயல் அஞ்சல், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

4) மேலாளர், சோழமண்டலம் எம்.எஸ். ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., நியூ மில்லினியம் காம்ப்ளக்ஸ், க.எண்.3 மற்றும் 4, 1 வது மாடி, திண்டுக்கல் ரோடு, காளவாசல், மதுரை – 625010.

**.... எதிர்மனுதாரர்கள்**

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம் பிரிவு 166 மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 2019 ன் கீழ் மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர் பாலசுப்பிரமணியன். அவரின் மனைவியான

மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,44,00,000/-(ஒரு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சம் மட்டும்) இழப்பீடாக 1 முதல் 4 எதிர்மனுதாரர்களை கொடுக்க உத்தரவிட்டும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் தேதியிலிருந்து 9% வட்டியுடன் சேர்த்து கொடுக்க உத்திரவு செய்தும், இழப்பீட்டு பணம் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்ட தவறும் பட்சத்தில் 18% வட்டியுடன் கட்ட உத்திரவிடக்கோரியும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதார்கள் ரூ.1,44,00,000/- இழப்பீடாக கோரியுள்ளார். அதற்கு நீதிமன்றக் கட்டணமாக மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயம் 1989ம் ஆண்டு விதி 24(1)ன் கீழ் ரூ.1,43,372.50/- செலுத்தப்படவேண்டும். ஆனால் மனுதாரரால் ரூ.372.50/- மட்டும் நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.1,43,000/-க்கு U/s.24(3) M.V.Actன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டி 05.01.2024 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு இ.ம.எண்.1/2024 ஆக இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள்: 27.12.2023 மற்றும் 28.12.2023.

இம்மனுவானது 12.06.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.A.முத்துராமன் அவர்கள் ஆஜராகியும், 1வது மற்றும் 2வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.J.ஷேக் இப்ராகிம் அவர்கள் ஆஜராகியும் 3வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் முறையே திரு.K.முரளிகிருஷ்ணன் மற்றும் திரு.A.தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும் 3வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டார்கள். மனுதாரர் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாத

TNRM010070732023

நிலையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. இம்மனு மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவுத் தொகை பற்றி உத்தரவு ஏதும் இல்லை.

2024ம் ஆண்டு ஜுன் மாதம் 12ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**M.C.O.P.No.07/2024**

**தீர்ப்பாணை உத்தரவு**

**நாள்: 12.06.2024.**